உ

சிவமயம்

ஸ்ரீ நல்ல அரவாயி அம்மன் துணை



திருச்சிராப்பள்ளி ஜில்லா, ஓமாந்தூர் வீட்டுக்கோவில், அபினிமங்கலம் காட்டுக்கோவில்

## ஸ்ரீ காமாக்ஷி அம்மன் , ஸ்ரீ நல்ல அரவாயி அம்மன் ஆலயத்தின் குடிமக்கள் சேர்ந்து நடத்தும்

# பெரும்பூஜை விழா அழைப்பிதழ்

**விநாயகர் துதி**

திருவாக்குஞ் செய்கருமங் கைக்கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

**அம்மன் துதி**

தந்தை தாயுநீ யென்னுயிர்த்துணையும் நீ சஞ்சலமது தீர்க்க
வந்த தேசிகவடிவுநீ உனையல்லாள் மற்றொரு துணைகாணேன்
அகிலமுமாதிபு மனப்பெருஞ்சோதியே மதியே அன்பர்தம்
சிந்தைமேவிய அபினிமங்கலத்தின் ஸ்ரீ அரவாயி அம்மன் தேவியே
குடிமக்கள் பண்புடன் கூடி வணங்குவோமே.

மெய்யன்பர்களே!

கடல்புடை சூழ்நெடு நில வரப்பில் விந்தஞ்சூழ் இந்திய தமிழ் நாட்டுள் சோறுடைத் தென்னும் சோழவள நாட்டின் திருச்சிராப்பள்ளி குட காவிரியின் வடபால் **ஓமாந்தூர் கிராமத்தில் அமைந்துள்ள வீட்டுக் கோவிலில்** ஸ்ரீ சுபகிருது ஆண்டு ஆடி மாதம் 29-ம் தேதி **(14.08.2022) ஞாயிற்றுக்கிழமை** பகல் 12 மணிக்கு பெரும்பூஜையும், மறுநாள் ஆடி மாதம் 30-ம் தேதி **(15.08.2022) திங்கட்கிழமை** பகல் 2.00 மணி முதல் 4.00 மணிக்குள் **அபினிமங்கலம் காட்டுக்கோவிலில் பெரும்பூஜையும்** நடைபெற இருப்பதால் குடிமக்களும் உறவின் முறையார்களும் மேற்படி பூஜையில் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

**சமயமந்திரி கோத்திர குடிமக்கள்**

**நிகழ்ச்சி நிரல்**

| தேதி | நேரம் | பூஜை விபரம் |
|---|---|---|
| ஆடி மாதம் 29-ம் தேதி<br>**14.08.2022 ஞாயிற்றுக்கிழமை** | பகல் 12.00 மணிக்கு | **ஓமாந்தூர்<br>வீட்டுக் கோவில் பூஜை** |
| ஆடி மாதம் 30-ம் தேதி<br>**15.08.2022 திங்கட்கிழமை** | பகல் 2.00 மணிமுதல்<br>மாலை 4.00 மணிக்குள் | **அபினிமங்கலம்<br>காட்டுக்கோவில் பூஜை** |

**குடி வரி ரூ. 2,000/-**

**குறிப்பு**

இரு கோவில்களிலும் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும்.

தாராளமாக நன்கொடை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இந்து பிரிண்ட் & ஃப்ளக்ஸ், 27 அல்லிமால் தெரு, திருச்சி-8. செல் : 99944 65753